News
aperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி [நீழலே.

புத். ௫௯] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஞூ புரட்டாதி மீ ௰உ (1947 செப்டம்பர் 26 வெள்ளிக்கிழமை) [இல ௪அ

# ஐயனூர் மகத்துவம்

## "ஐயனே! இவள் உன்னடைக்கலம்"

(முற்றேடர்)

காருறழ் வெய்ய களிற்றிடை யாகிப்
பாரிட ரேண்ணிலர் பாங்குற நண்ணப்
பூரணை புட்கலை பூம்புற மேவ
வாரண மூர்பவன் முன்னுற வந்தான்.

இந்திரன் ஐயனுரைத்தியானித்தலும், ஐயனூரானவர் பூரணை புட்கலை யென்னும் இரு சத்திமாரும் தம் இருமருங்கிற் பொருந்த, எண்ணிறந்த பூதங்கள் புடைசூழ வெள்ளை யானையின் மீது எழுந்தருளிவந்து இந்திரனுக்குக் காட்சி கொடுப்பாராயினர்; அரியபுத்திரர் வருகையைக் கண்ட இந்திரன் உடனே அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி யெழுந்து தோத்திரஞ் செய்து நின்றான்; அப்பொழுது மகாசாத்தனுர் இந்திரனைத் தண்ணளியுடன் நோக்கி "தேவர்கோனே, உனக்கு வேண்டிய வரம் யாது இயம்புதி" என்று வினவ, இந்திரன் மீளவும ஐயனுரை வணங்கி இங்ஙனம் விண்ணப்பஞ் செய்வான்:-

"சுவாமீ! கொடியவனுகிய சூரபன்மன் எங்கள் நாடு நகர் முதலிய எல்லாவற்றையுங் கவர்ந்துபோக, நான் அச்சூரபன்மன் முதலிய அசுரர்களுக்குப்பயந்து விண்ணுலகைவிட்டு, எனது இல்லாளாகிய இந்த இந்திராணியோடும் கரந்து இம்மண்ணுலகத்தில் வந்து இச்சீகாழிவனத்தில், பரமசிவனைச் சிந்தித்துத் தவஞ்செய்து கொண்டிருக்கிறேன்; இப்படியிருக்கும்போது சூரபன்மன் செய்த துன்பங்களைச் சகிக்கலாற்றாத தேவர்கள் தங்களுக்கு அக்கொடிய அசுரனால் நேரும் இடையூற்றினைத் தமியேனுக்கு முறையிட்டு அவற்றை நீக்கும் வண்ணம என்னை வேண்டி நிற்கிறார்கள்; சூரபன்மன் முதலாம் அசுரர் எங்களுக்கு விளைக்குய இன்னலை நீக்கியருளும்வண்ணம் பரமசிவனிடம் விண்ணப்பஞ் செய்யும் பொருட்டு இச்சில தேவருடன் கைலையங்கிரிக்குப்போக எண்ணங்கொண்டேன்; ஆனுல் என் இல்லாளாகிய இவள் இந்த வனத்திலே தன்னந்தனியேயிருப்பதற்குப் பயப்படுகிறாள்: நான் கைலைக்குப் போய் மீண்டு வருமளவும், இவளுக்குத் துணையாக வைத்துப் போதற்கு இத்தவேளை எவரும் இல்லை; ஆதலால், ஐயனே, இவள் உமது அடைக்கலம்' என்று பணிந்தான்.

இங்ஙனம் பணிந்துநின்ற இந்திரனை ஐயனூர் அருளுடன் நோக்கி "விண்ணவர்க்கிறையே, அஞ்சற்க, உன்தேவி தனித்தனளென்று கவலைப்படவேண்டா, உனது இல்லாள் இந்த இடத்திற்றனே இருக்கலாகும்: இந்திராணிக்கு நீ கைலைக்குப் போய் மீண்டு வருங்காலும் அசுரராலாக, வேறு எவராலாக எவ்வகையான இடையூறும் நேராவண்ணம் பாதுகாப்பேம; முக்கண் மூர்த்தியெழுந்தருளிய கைலைக்கு நீ போய் வருதி" என்று அருள்புரிதலும், இந்திரன் அவரைவணங்கினன்; அவர் அவ்வனத்திலுள்ளதாகிய ஒரு திருக்கோயிலில் எழுந்தருளி, தமது சேனைத் தலைவராகிய வீரமாகாளரை விளித்து "மாகாளனே, இந்திரன் தன் தேவியை இப்பூங்காவிலே எம்மிடம் அடைக்கலமாக வைத்து, எங்கள் பரமபிதா எழுந்தருளிய கைலையங்கிரிக்குச் செல்கிறான்; ஆனதினுல் அத்தேவிக்கு எவ்வகையான இடையூறும் நேராவண்ணம் காக்குதி" என்று பணித்தலும், வீரமாகாளர், 'அப்படியே செய்கிறேன்" என்று ஐயனுரை வணங்கிக்கொண்டு அப்பூஞ்சோலையிற் சஞ்சரிப்பாராயினர்; இந்திரனும் தன் தேவிக்குத் தேறுதல் கூறி அங்குவந்த சில தேவர்களுடன் கைலைக்குச் சென்றான்; இந்திராணி தன் நாயகன் உத்தேசித்துச் செல்லுங் கருமம் இனிது நிறைவேற வேண்டுமென இறைவனைத் தியானித்தபடி விரதமிருந்தாள்.

### அசமுகி

அசமுகியென்பவள் சூரன், சிங்கன், தாரகன் என்னும் மூவருக்குந் தங்கையாயுள்ளவள்: இவளுடைய குணங்களையும், செயல்களையும் பின்வருமாறு கச்சியப்பசிவாசாரிய சுவாமிகள் கூறியுள்ளார்:

இவள்,

'போறையில்லவள், அருளில்லவள்
புகழில்லவள், சிறிதும்
நிறையில்லவள், நாணில்லவள்
நிற்கின்றதோ ரறத்தின்
முறையில்லவள், வடிவில்லவள்
முடிவில்லதோர் கற்பின்
சிறையில்லவள், உலகோர்க்கொரு
சிறையாமெனத் திரிவாள்'

[கற்பின் சிறையில்லவள்-கற்பென்னுங் கட்டுப்பாடில்லாதவள். உலகோர்க்கொரு சிறையாமெனத் திரிவாள் - உலகிலுள்ள மக்களுக்கு ஒரு சிறைக்கூடமென்று சொல்லும்படி அதஞ் செய்துகொண்டு சஞ்சரிப்பாள்.]

"போய்யுற்றவள், களவுற்றவள்
புரையுற்றிடு சுரையூன்
துய்யுற்றவள், களியுற்றவள்
சோர்வுற்றவள் கோலைசெய்
கையுற்றவள், விழியாலழல்
காலுற்றவள், பவத்தின்
மொய்யுற்றவள், படிறுற்றவள்
முனிவுற்றவள் மனத்தின்."

[புரையுற்றிடு சுரையூன் துய்யுற்றவள் - குற்றத்தோடு கூடிய கள்ளும் மாமிசமும் அருந்துபவள்; களியுற்றவள் - வெறிகொண்டவள்; சோர்வுற்றவள் - சொற்சோர்வு சோம்பல் முதலிய தாமச குணங்களோடு கூடியவள்: விழி - கண்; அழல் - நெருப்பு காலுதல் - கக்குதல்; பவத்தின் மொய்யுற்றவள் - பாவத்தடிப்புடையவள், எல்லாப் பாவங்களையும் கூசாதுசெய்பவள்; படிறு - வஞ்சனை; முனிவு - கோபம்; மனத்திலே வஞ்சனை கோபம் முதலியன கொண்டவள் என்பது கருத்து.

மேலும், வலிமையில் இவள் சிங்கமுகன், தாரகனென்னுமிவர்களை நிகர்த்தவள்: சூரபன்மனுக்குரிய அண்டங்கள்தோறும் அற்ப நேரத்திலே சென்று மீண்டுவரும் ஆற்றலுடையவள்; தனக்கொரு கணவனென்ற நியதியில்லாதவள்; தான் இச்சித்த [illegible]

[illegible] 4 ம் பக்கம்

### பிரார்த்தனை

பேற்றைத் தவம்சற்று மில்லாத வென்னைப்ர பஞ்சமெனும்
சேற்றைக் கழியவழி விட்டவா செஞ்ச டாடவிமேல்
ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமரன் க்ருபாகரனே.

— அருணகிரிநாதர்.

## அரிசி வருகிறது

### திருப்திகரமான நிலை

இவ்வார ஆரம்பத்தில் 4 அரிசிக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தை அடைந்திருக்கின்றன. அவற்றிலிருந்து ஏறக்குறைய 20,000 தொன் அரிசி இறக்குமதி செய்யப்படும்.

அடுத்தவாரம் 8,500 தொன் மா ஆஸ்திரேலியாவிலிருந்து கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாவின் இருப்பு நிலை மிகவும் திருப்திகரமாயிருக்கிறது.

ஸ்ரீ கே. ஆழ்வாப்பிள்ளை சில நாட்களுக்குமுன், சர்வதேச உணவு விநியோக மகாநாட்டுக்குச் சென்று இலங்கையின்தேவைகளை வற்புறுத்தி எடுத்துரைத்ததன் பயனுக, இவ்வாண்டு முடிவதற்குள் 60,000 தொன் அரிசி எகிப்தில் இருந்து கிடைக்கும். ஐக்கியமாகாண பிரேஸிலில் இருந்து 21,000 தொன் அரிசியும் கிடைக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

## காடைத்தனம்

### தோல்வியடைந்த அபேட்சகர் வீட்டிற் கல்வீச்சு

கொழும்பு தென்பகுதித் தேர்தலில் தோல்வியடைந்த திரு. பீ. சரவணமுத்துவின்வீட்டின்மீது சென்ற திங்கட்கிழமை ஓர் சிலர் கல்வீசினர் என்று தெரிகிறது. இதனை யறிந்த பொலிசார் காத்திருந்து, ஓர் டஸ்ஸில் வந்த அக்காடையரைக் கையும் மெய்யுமாகப் பிடித்தனர். அந்த பஸ்ஸிற்குள் கற்கள், போத்தல்கள் முதலியன காணப்பட்டனவாம்.

ஸ்ரீ சரவணமுத்து ஓர் சுயேச்சை வாதியாகப் போட்டியிட்டவர். அவர்க்கெதிராக மிஸ்ரர் ஆர். ஏ. டி. மெல் என்னும் ஐ. தே. கட்சிஅபேட்சகர் போட்டியிட்டு வெற்றிபெற்றவர். தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டதும், ஸ்ரீ சரவணமுத்து பேசும் போது, தான் வெற்றியடைந்திருந்தால், இலங்கையிலே வகுப்புவாதத்திக்குச் சாவுமணி அடித்ததுபோலாகும் என்று குறிப்பிட்டார்.

## நான்ஏன்ஹிந்துவானேன்?

### [வி. ஞானமணி பட்டங்கெட்டியார்]

(முற்றொடர்)

முதலில் கிறிஸ்தவ சமய சரித்திரமான திருச்சபைச் சரித்திரத்தைநேர்மையான இருதயத்துடன் படித்தேன். அதில் கி. பி. 325 இலிருந்துதான் விபரமாக விளக்கப்பட்டிருக்கிறது. கி. பி. 325ல் ரோமாபுரிச் சக்கரவர்த்தியான கான்ஸ்டன்டைன் என்னும் அரசனை நிசியாநகரத்தில் கூடிய கிறிஸ்தவ திருச்சபையில் கிரேக்ககோயில் பாதிரிமார்களால் அடியாராக்கப்பட்டு கான்ஸ்டன்டைன் முனிவரென்ற புகழ்மாலையும சூட்டப்பெற்றார். இவர் சரித்திரத்தைப் படித்தவர்களுக்கு இவரின் குணுதிசயம் நன்கு தெரியும். கிறிஸ்து யூதர்களின் அபாண்டமான குற்றம் சாட்டப்பெற்றதுடன் அவதூறான வசவு, சிரசில் முட்கிரீடம் சூட்டி சிலுவையில் அறைந்து கொல்ல எத்தனித்த சமயத்திலே கிறிஸ்துநாதர் "பிதாவே இவர்களை மன்னியும் தாங்கள் செய்வது இன்னதென்றறியா திருக்கிறார்கள்" என்று கருணைகாட்டிய கிறிஸ்தவசமயத்திற்குத் தலைமைதாங்கி நடத்தும் பொறுப்பேற்ற கான்ஸடன்டைன் முனிவரின் முக்கிய வாழ்க்கைச் சரித்திர நிகழ்ச்சிகள் வருமாறு:- குற்றம் நிரூபிக்கப்படுமுன் மகனைக் கொன்றார். காரணமின்றி சந்தேகத்தின்பேரில் மனைவியைக் கொன்றார். தம் மைத்துனனை வெட்டி வீழ்த்தினார். குற்றமற்ற தம்மகனையும் கொன்றார். தன் கொள்கையை எதிர்ப்பவர்கள் யாராயிருந்தாலும் எமபுரிக்கனுப்பிவைப்பார். இப்பேர்ப்பட்ட ஜீவகாருண்ய மூர்த்தியைத்தான் சில சுய நலமிகள்கூடி கான்ஸடன்டைன் முனிவரென்றும் வணக்கத்திற்குரிய பெரியாரென்றும் கதைகட்டினர்கள். மனித உள்ளம் படைத்த எவனும் இந்த நாடகத்தை ரசிக்கமுடியுமா? என்பதை வாசகர்களின் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறேன்.

மற்றுமொருமுறை கான்ஸ்டன்டைன் தலைமையில் திருச்சபை கூடி சில திட்டங்கள் வகுக்கப்பட்டன அச்சபையின் தீர்மானங்களை பரிசுத்தஆவியின் ஆணை எனக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. அதை மீறுகிறவர்களுக்குக் கிடைத்த பரிசு கோபம் நிறைந்த வசவு, சாபம், பொதுஜன சம்காரம், திடுக்கிடும்படியான படுகொலைகள். பலாத்காரத்தினுல் ஷை கொள்கைகள் திணிக்கப்பட்டன. நிசியசபை நடந்தபின் பல சண்டைகள் ஏற்பட்டதில் கன்னியர்பலர் அவமதிக்கப்பட்டதுடன் தூயகோவில்களின் பரிசுத்தம் கெடுக்கப்பட்டது, ஞானஸ்நான தொட்டிகள் உடைக்கப்பட்ட

தொடர்ச்சி 4 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஞு
புரட்டாதி மீ ௧௦ ௨ வெள்ளிக்கிழமை

## ஒற்றுமைவராதா?

பல கட்சிகளாகப் பிரிந்தும், சுயேச்சையினரெனத் தனித்தும் முயற்சி செய்து பிரதிநிதித் தேர்தலை நடத்தித் தத்தங் கட்சிக்குரிய பிரதிநிதிகளைத் தெரிந்துகொண்டாலும், பாராளு மன்ற அரசியல் இப்படியான பல கட்சியினருக்கிடையில் ஒரு அளவிற்கு ஒற்றுமை ஏற்படிற்றான் அநுகூலமாக நடைபெறு மென்னுங் கருத்துப்பட இப்பத்திரிகையின் சென்ற பிரசுரத்தில் வெளியிட்டுள்ளேம்; ஆனல் இப்பொழுது கருமங்கள் போகும் போக்கை அவதானிப்பின், ஒற்றுமைக்கு மாறாக வேற்றுமையே அதிகப்படுமென்றெண்ணிப் பயப்படக் கிடக்கின்றது ஏனைய கட்சிகளையெல்லாம் தனித்தனி கணக்கிடும்போது, திரு. செனுயக்காவின் ஐக்கிய தேசீயக்கட்சி மூலமாகத் தேர்தல் பெற்ற பிரதிநிதிகளே, கூடிய தொகையின ராதலால், இலங்கைத் தேசாதிபதி யவர்கள் புதிய பாராளுமன்றத்திற்காகிய மந்திரிமார் முதலியோரைத் தேர்ந்து நியமிக்கும்படி திரு. செனுயகாவுக்கு அநுமதி கொடுத்துவிட்டார். திரு. செனுயகாவும் தம்முடைய பரிபாலன முயற்சியை, மூந்திச் சிங்கள அரசர் முடிசூடுங் காலத்திலே செய்துவந்த சமயக் கிரியைகள் வழிபாடுகளென்னுமிவைகளோடுதான் ஆரம்பிக்கலானரென்பது அறியக் கிடக்கின்றது; அக் கிரியைகளும் கொள்கைகளும் பாராட்டத் தக்கன.

ஆனல் திரு. செனநாயகா தலைமை வகித்து நடத்த உத்தேசித்திருக்கும் பரிபாலன விஷயத்திலே, அவருடைய ஐக்கிய தேசீயக் கட்சிப் பிரதிநிதிகளைத் தவிர மற்றைக் கட்சிப் பிரதிநிதிகள் அவரோடு ஒத்துழைப்பரோ என்பதிற் பெருஞ் சந்தேகமும் அச்சமும் ஏற்படலாயின. திரு. செனுயகாவின் ஐக்கிய தேசீயக் கட்சியோடு சேர்ந்து உழைப்பரென எதிர்பார்த்திருந்த சுயேச்சைப் பிரதிநிதிகள் சிலர்இப்போது அவருடன் சேர்ந்து உழைக்கமாட்டார்களென எண்ணவேண்டியிருக்கிறது; சுயேச்சைமூலம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் 21 பேராவர்; இந்த இருபத்தொரு பேரையும் ஒன்றுசேர்த்து ஸ்ரீ லங்கா சுவாதீனக் கட்சியினர் என்னும் பெயருடன் ஒரு கட்சி ஆக்கிச் சுவாதீனத்தோடு நின்று உழைக்கவேண்டுமென்ற நோக்கங்கொண்டு அச் சுயேச்சை வாதிகளு ளொருவராகிய திரு. C. சுந்தரலிங்க மவர்கள், சுயேச்சைப் பிரதிநிதிகளுட் பதினெழுவரைக் கூட்டி யோசித்தனரெனவும், தம்முடைய நோக்கத்தைத் திரு. செனுயகாவுக்குத் தெரிவித்தபோது அவர் அதற்குச் சிறிதேனும் உடன்பட்டிலரெனவும் தெரிவிக்கப்படலாயிற்று; சுயேச்சைப் பிரதிநிதிகள் ஐக்கிய தேசீயக் கட்சியினருடன் எக்காரணம்பற்றியும் ஒத்துழைக்கலாகா தெனவும், அப்படியன்றி எவரேனும் ஒத்துழைக்க ஆசைப்பட்டால், அவர்கள் புதிதாகக் கூட்டப்பட்ட ஸ்ரீ இலங்கைச் சுவாதீனக் கட்சியிலிருந்து உடனே விலகிக் கொள்ளவேண்டு மென்றும் மேற்படி கட்சியார் பிரமாணஞ் செய்திருக்கின்றனராம்; மேலும் சுயேச்சை வாதிகளாகத் தேர்தல் பெற்றவர்களுள் இரு பிரதிநிதிகள் சமதர்மக் கட்சியில் அங்கத்தவராய்ப் போய்ச் சேர்ந்துவிட்டார்களாம்; இவைகளையெல்லாம் யோசிக்குமிடத்தில் திரு. செனுயகாவுடன் இச் சுயேச்சைவாதப் பிரதிநிதிளிற்சிலர் சேரமாட்டாரெனவும் எண்ணவேண்டி யிருக்கிறது.

இனி, இலங்கை இந்தியக் காங்கிரஸ் கட்சியினருடன் திரு செனுயகா ஒத்துழைக்கப் போகின்றரோ வெனில், மேற்படி காங்கிரஸ் கட்சித் தலைவராகிய திரு. G. R. மோத்தா என்பவர் பின்வருமாறு தெரிவிக்கிறார்:— "எங்கள் பிரதிநிதிகளை மந்திரசபையில் நியமிப்பதையிட்டு திரு. செனநாயகா இதுவரையிற் சம்மதங் கேட்கவில்லை; நாங்களும் அப்படியான நியமனம் வேணுமென ஆசைப்படவில்லை; எங்கள் பிரதிநிதிகளை மந்திரசபையிற் சேரச்சொல்லிக் கேட்டால் அந்த விஷயமாக யோசிப்போம்". இதனல் திரு செனுயகா தம்மோடு சேர்ந்து உழைக்கும்படி இலங்கை இந்தியக் காங்கிரசினரையுங் கேட்கவில்லையென்பது புலப்படுகின்றது.

இனி இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி விஷயத்தில், மேற்படி கட்சியினர் மூலந் தேர்தல் செய்யப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகளை திரு. செனுயக்கா தமது பரிபாலனத்திலே சேரும்படி கேட்கவில்லை யென்பதும், தமிழ்க் காங்கிரஸ் கட்சிப் பிரதிநிதிகளுக்கு திரு. செனுயகாவுடன் சேர்ந்து உழைக்க நோக்கமில்லையென்பதும் இப்பொழுது புலப்படலாயின. தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகள் எதிர்க்கட்சியினராக நின்று கருமமாற்ற உத்தேசித்திருக்கின்றனரென்ற செய்தியும் இப்போது பிறக்கின்றது; இது தமிழ் மக்கள் விஷயத்திலே எவ்வளவிற்கு அநுகூலந் தருமென்பது இருந்தறிய வேண்டியது. ஏன்? பிருத்தானிய பாராளுமன்றத்திலே எதிர்க்கட்சி எப்பொழுதுமுண்டுதானே, முந்திய எதிர்க்கட்சி தானே இப்பொழுது தலைமை வகித்துப் பரிபாலனம் நடத்துகின்றது என்றல், பிருத்தானிய பாராளுமன்றத்திலே பல கட்சிகளிருப்பினும் அவர்க ளெல்லாரும் பிருத்தானிய சாதியினரே யாவர்; சிற்சில கொள்கைகளிலேதான் கட்சி[illegible]குண்டு; ஆனல் இந்த இலங்கையிலே சிங்களர் தமிழர் என்னும் இரு சாதியினரே பிரதானமானவர்கள்; இப்படியாகத் தொகையிற்கூடிய சிங்களருக்கு எதிர்க்கட்சியினராகத் தொகையிற் குறைந்த தமிழர் நிற்கத் தலைப்பட்டால், சிங்களர் தமிழரென்ற வேற்றுமை காலகதியில் தடித்து வருமே யல்லாமல் ஒற்றுமை ஏற்படப்போவதில்லை யென்றுஞ் சொல்லலாம்; அல்லாமலும் சிங்களர் தமிழருக்கு அடுத்த தொகையினராகிய இலங்கை இஸ்லாமியர் திரு. செனுயகாவோடு சேர்ந்து உழைக்கச் சித்தமா யிருக்கிறார்களென்பதும் விளங்கிக்கொள்ளத் தக்கது. இவைகளை யெல்லாம் உற்று யோசிக்குமிடத்திலே தமிழர் பிரிந்து நிற்றல் புத்தியின்பாற்படா தென்பது பலர் கொண்ட அபிப்பிராயமாகும். ஆனல் நடக்கவேண்டியது நடந்தேதீரும்.

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—32)

### "அடியார் தலைப்பட்டால் முடியாத தொன்றில்லை"

இரண்டுவார காலம் வரையில் இராமன், விஜயரத்தினம் பாக்கிய லட்சுமி யென்னு மிவர்களுடைய வாசஸ்தானத்திலே தங்கி நின்று பின்னர் இவர்களுடைய அநுமதியோடு சிவகுருநாதன் கண்ணகியம்மை சிவபாக்கிய மென்னு மிவர்கள் வசிக்கும் தானத்திற்கு மீண்டுவந்தான்; சிவபாக்கியத்திற்கும் தாய்க்கும் தமயனுக்கும், விஜயரத்தினம் பாக்கிய இலட்சுமியென்னுமிவர்களுடைய சுகங்களைப் பற்றி இராமன சொன்னன்; சிலதினஞ் செல்ல விஜயரத்தினம் பாக்கியலட்சுமி இருவரிட மிருந்து சிவகுருநாதனுக்கு ஒரு கடிதம் வந்தது: அதில் பாக்கியலட்சுமி தான் இரண்டு தினங்களுக்கு முந்திச்சமீபத்திலுள்ளதாகிய ஒரு வித்தியாசாலையில் ஆசிரியையாகச் சேர்த்து படிப்பிப்பதாகவும், அவ்வித்தியாசாலையிலேயுள்ள உபாத்தியாயர்கள் யாழ்ப்பாணத்தவர்களென்றும், அவர்களெல்லாருந் தன்னிடத்தில் அபிமானமும் மதிப்பும் பாராட்டி வருகிறார்க ளென்றும், தானும் அப்படியே அவர்களுடன் ஊடாடிக்கொள்வ தென்றும், தான் இப்படியான நல்ல நிலையி லிருப்பது அவர்கள் மூவருஞ் செய்துவரும் உதவியினுற்ற னென்றும், சிவபாக்கியம் கண்ணகியம்மை சிவகுருநாதன் என்னும் மூவரையும் தான் சீவிய பரியந்தம் மறத்தல் முடியாதென்றும் தன் நாயகன் தன்னிடத்தில் அதிக அன்பு பாராட்டி வருகிறாரென்றும், தானும் அவருக்கு இதமாக நடந்து கொள்வதென்றும் விபரமாக எழுதியிருந்தாள்; இவற்றோடு "அம்மா அண்ணுவுக்கு எங்கள் சுகத்தையுஞ் சொல்லுங்கள்" என்றும் எழுதியிருந்தாள்; விஜயரத்தினம் சிவகுருநாதனுக்கு எழுதிய கடிதத்திலே அவனது மைத்துனனுகிய நமசிவாயத்தைப்பற்றி அறிதற்கான முயற்சிகளைத் தான் செய்து வருவதாகவும், தூரித்த ஊர்களிலுள்ள தன் நண்பர்களுக்குத் தான் அந்த விஷயமாகக் கடிதமெழுதி யிருப்பதாகவும், இற்றைவரையில் யாராயினும் நமசிவாயத்தைப்பற்றித் தனக்கு ஒன்றும் தெரிவிக்கவில்லை யெனவும் எழுதியிருந்தான்; விஜயரத்தினத்தின் கடிதத்தைப் படித்துக்காட்டக் கேட்டுக் கொண்டிருந்த தங்கை சிவபாக்கியம் நமசிவாயத்தின் விஷயமாகத் தமயன் படித்தபோது முகவாட்டமுற்றாள்; அதனைத் தமயன் அவதானித்து 'தங்கைச்சி, நீ கவலைப்படவேண்டாம்; எங்கள் அத்தான் விஷயத்தில் நானும் கண்ணுங் கருத்துமாய் முயற்சி செய்து வருகிறேன்; திருவுளச் செயலை யார் அறிவார்; நீ இறைவனை வேண்டிக்கொள்; எங்கள் அம்மாவும் தம்முடைய மருமகனையிட்டு அல்லும் பகலும் தெய்வத்தைப் பிரார்த்தித்த வண்ணமாயிருத்தலை நாங்கள்தாமே நேரிற் காண்கிறோம்; எங்கள் தாயாரிடத்திலே தெய்வ நம்பிக்கையும் பத்தியும் உண்டு; நாங்கள் மூன்று பேரும் ஒரே மனசாய்க் கடவுளை இந்த விஷயமாகப் பிரார்த்தித்தால், அவர் ஒரு வழி காட்டுவார்; அடியார் தலைப்பட்டால் முடியாததொன்றில்லை" என்று இவ்வாறு சொல்லி அவளை ஒருவாறு தேற்றினன்; சிவபாக்கியமும் எந்தநேரமும தெய்வசிந்தனையோடு கூடியவளாப் ஒழுகுவாளாயினள்.

### "சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயமொருபோதுமில்லை"

பாக்கியலட்சுமி ஒருநாள் தன் நாயகனுக்குப் போசனம் பரிமாறும்போது அவனைப் பார்த்து "கேளுங்கள், எங்கள் பள்ளிக்கூடத்திலே செவ்வாய் வெள்ளிக்கிழமைகள் தோறும் சடையோடு கூடிய ஒரு சாமியார் வந்து பிள்ளைகளுக்குச் சமய பாடம் படிப்பித்துத் தேவாரமுஞ் சொல்லிக் கொடுத்துப் போகிறார்; தெய்வபக்தி யுள்ளவர்; எந்த நேரமும் திருநீறும் உருத்திராக்கமும் அணிந்தபடியே அவரைக்காணலாம்; பள்ளிக்கூடத்திலே சைவப் பிள்ளைகளாக, உபாத்தியாயர்களாக, நெற்றியில் விபூதியில்லாது காணப்படின், அந்தச் சாமியார் தம்முடைய பட்டுப் பையிலேயுள்ள விபூதியை எடுத்து அவர்களுக்குப் பூசும்படி கொடுக்க, அவர்களும் இரண்டு கைகளாலும் விபூதியை ஏற்றுச் சிவ சிவ என்று சொல்லிப் பூசிக் கொள்வார்கள்; இடை யிடையே சிவ மந்திரத்தை மெல்ல உச்சரிக்கிறார்; தம கடமையைச் செய்வதன்றித் தலைமை யுபாத்தியாயரோடும் அதிகம் பேச்சு வைத்துக்கொள்ளமாட்டார்; நான் பள்ளிக்கூடத்திற் படிப்பிக்கும்படி சேர்ந்த நாளுக்கு அடுத்தநாள், அதாவது ஒரு செவ்வாய்க்கிழமை நான் படிப்பித்துக் கொண்டிருந்த வகுப்பிற்குச் சமயபாடம் படிப்பிக்கவும் தேவாரஞ் சொல்லிக் கொடுக்கவும் அந்தச் சாமியார் வந்ததைக்கண்டு பிள்ளைகள் எழுந்து நமஸ்கரித்ததைப் பார்த்து நானும் உடனே எழுந்து நின்று நமஸ்காரஞ் செய்தேன்; உடனே அவர் தம்மிடமிருந்த விபூதிப் பையிலிருந்த விபூதியை எடுத்து எனக்குத் தர, நான் பயபத்தியோடு ஏற்றுப் பூசினேன்; பூசும்போது "மகளே, உம்மை ஆண்டவன் காப்பாராக, நீர் யாழ்ப்பாணமா" என்று கேட்க "ஓம், சுவாமி" என்று சொல்லி மீளவும் நமஸ்காரஞ் செய்தேன்; சிவாயநம என்று சிந்தித்திருப்போர்க்கு அபாய மொருநாளுமில்லை, அம்மா' என்று சொல்லிவிட்டுப் பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்லிக்கொடுக்க அவர் தொடங்க, நான் அந்த வகுப்பைவிட்டு, அடுத்த வகுப்பிற்குப் போய்ப் படிப்பித்தேன்; அவர் எங்கிருந்து வருபவர் பெயரென்ன என்பவைகளைப்பற்றி நானென்றுமறியேன்; அவரைப்பற்றிய வரலாறுகளை எனக்கு அறியப்பிரியமானலும், மற்றைய உபாத்தியாயர்களிடம் விசாரிக்கக் கூச்சப்பட்டு நான் இதுவரையில் எவரையுங் கேட்கவில்லை; உங்களுக்கு இந்த வரலாறுகளையெல்லாம் சொல்வது வேறொன்றற்குமல்ல, அந்தச் சாமியார் பல இடங்

தொடர்ச்சி 5-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலைக் கைப்பற்ற வேண்டும்

## அன்றேல் நன்மைசெய்ய முடியாது

### தமிழ்க் காங்கிரஸ் சிந்திக்கவேண்டியன

[நமது அரசியல் நிருபர் எழுதுகிறார்]

சென்றபிசுரத்தில், யான் எழுதிய கட்டுரையில், இப்போது ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமையில், அகிலஇலங்கைத் தமிழ்க் காங்கிரஸ, மிஸ்ரர் சேனநாயக்காவின் ஐக்கியதேசியக்கட்சியுடன் ஒத்துழைக்கவேண்டும் என்றும், அந்த ஒத்துழைப்பின் மூலமாக மந்திரசபையில் பங்குபற்றி தமக்குள்ள உரிமைகளைப் பெறவேண்டுமென்றும், இனியும் தமிழ் மக்கள் அரசியல் அநாதைகளாகப் பாலைவனத்தில் திரியக்கூடாது என்றும் குறிப்பிட்டிருந்தேன் இளைஞர்கள் பலர்க்கு இந்த ஆலோசனை கசப்பாயிருக்கலாம். மிஸ்ரர் சேனநாயக்காவுடன் ஒத்துழைப்பதிலும் பார்க்க, அரசியல் அநாதைகளாகத் திரிவதே மேல் என்று இவ்வாலிபர்கள் கூறலாம். ஆனால் இவ்விஷயத்தில் நாம் பிரச்சினைகளை ஆர அமர ஆலோசித்து ஓர் முடிவுக்கு வரவேண்டுமேயன்றி, கேவலம் மனக்கிளர்ச்சியினால் தூண்டப்பட்டு ஒன்றுக்கும் பயன்படாக் கோஷங்களைக் கிளப்புவதால் எவ்வித மான நன்மையும் தமிழ்மக்களுக்குக் கிடைக்கமாட்டாது. நாங்கள் விரும்பினால் என்ன, விட்டால் என்ன, சிங்களர்தான் இந்த இலங்கையின் அரசியல் நிருவாகத்தில் அதிகபங்கெடுத்துக் கொள்வார்கள் என்பதை நாம் முதலில் ஒத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தங்களுக்கிடையே யிருக்கும் அரசியல் சம்பந்தமான அபிப்பிராயபேதங்களை எல்லாம மறந்து இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் என்பவர்களுக்கெதிராக, சிங்களமகா சபை போன்ற ஓர் ஸ்தாபனத்தின்கீழ் ஒருங்குசேர்ந்தால், அதனைத் தடுக்க எம்மால் முடியாது. தமிழ்க்காங்கிரசின்கீழ், தமிழ்மக்கள் எவ்வாறு ஒற்றுமையடைய முடியுமோ. அதேபோல சிங்களமகாசபையின்கீழ் சிங்களர் அனைவரும் ஒற்றுமையடைவாரானால், நாம் எப்போதும் நிர்க்கதியினராக விருக்கவேண்டிய ஓர் நிர்ப்பந்தம் ஏற்படும். தமிழராகிய நாம் அரசாங்கத்திற் பங்குபற்றாது எதிர்க்கட்சியில் இருந்து சிங்களமந்திரிமார் செய்யும் கருமங்களைக் கண்டித்துக்கொண்டே வந்தால், "தமிழர் எங்களுக்கு மாறாக இருக்கிறார்கள்" என்று சிங்களத் தலைவர் தம் பிரசாரத்தினைத் தீவிரமாக நடாத்தி இயன்ற அளவுக்குத் தமக்குள்ளே ஒற்றுமை கொள்ளத் தலைப்படுவர். அப்படியான நிலைமை ஒன்று ஏற்பட்டால், வகுப்புவாதமற்றுத் தொழிலாளர் நலனையே பிரதான லட்சியமாகக் கொள்ளும் இடதுசாரிக் கொள்கையாளரின் எதிர்ப்பிரசாரம் யாவும் சிங்கள வகுப்புவாதம் என்றும் அக்கினியாற்றின்மீது மயிர்ப்பாலம் இட்டதை நிகர்க்கும் என்பதை நாம் இப்போதே அறிந்துகொள்ளுதல் நலம். இப்படியான வகுப்புவாதப் பிரசாரத்தில் சிங்களத்தலைவர்கள் இறங்காதபடி, தமிழ்மக்களும் தங்களுடன் ஒத்துழைக்கிறார்கள் என்ற அபிப்பிராயம் அவர்களுக்கிடையே ஏற்படல் வேண்டும்.

O

### மந்திரசபையைக் கைப்பற்றுக

நாம் எம் பகைவனிடம் இருந்து எமக்குரிய சலாக்கியங்களைப் பெறவேண்டுமானால், அவனுடைய கோட்டையை வெளியேயும் உள்ளேயும் தாக்கி. அவனுடைய கேந்திரஸ்தானங்களைக் கைப்பற்றவேண்டும். அப்படிப்பட்ட கேந்திரஸ்தானங்களில் மந்திரசபையும் ஒன்று இந்த விஷயத்தில் இந்தியாவில் உள்ள காங்கிரஸ சட்டசபைப்பிரவேசம் செய்து, மந்திரசபைகளைக் கைப்பற்றி பிரிட்டிஷ் சிங்கத்தை அதன் குகைக்குள்ளேயே வைத்து ஆட்டியதை நாம் குறிப்பிடலாம். இந்திய இடைக்கால அரசாங்கத்திலே முஸ்லிம் லீக் பிரதிநிதிகள் ஐவர் போய்ச் சேர்ந்தனர். அங்கே அவர்கள் செய்த வேலைகளினால், 'அப்பா, போதும் இவர்கள் உபத்திரவம், இவர்களை வேறாக்கி, இவர்கள் கோரும் பாகிஸ்தானையே கொடுத்தாலும் தேவையில்லை" என்று காங்கிரஸ்வாதிகள் கூறும்படியான ஓர் நிலைமை ஏற்பட்டது. முஸ்லிம்லீக்கர் இடைக்கால அரசாங்கத்திற் சேர்ந்தபடியாலேயே ஓர் காலத்தில் பகற்கனவு என்று எண்ணி நகையாடப்பட்ட பாகிஸதான் வெகு சீக்கிரத்தில் உருவாக முடிந்தது. இதனைப் போலவே, தமிழ்மக்கள் மந்திரசபைக்கு வெளியேயிருந்து கத்துவதால் ஆம்பயன் கிடைக்கமாட்டாது. எங்கே அதிகாரமும் செல்வாக்கும் உண்டோ, அங்கேதான் மனிதர் நாடுவார்கள். தமிழ்க்காங்கிரஸ மந்திரசபையை ஏற்காதுவிட்டால், காங்கிரசுக்கு வெளியேயுள்ள தமிழர்களுக்கு ஆசைகாட்டி மிஸ்ரர் சேனநாயக்கா தம் பக்கம் இழுத்து, வேட்டைவாளி தன் வயப்பட்ட பூச்சிகளைத் தன்மயமாக்குவதுபோலச் செய்யமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம? காங்கிரஸ்வாதிகளுக்கிடையே யிருக்கும் ஒற்றுமையைக் குலைக்க மிஸ்ரர் சேனநாயக்காவோ, வேறு சிங்களத்தலைவர்களோ முயலமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம். வெள்ளம் பள்ளத்தை நாடுமாப்போல, மனிதன் பட்டம் பதவிகளை நாடமாட்டான் என்பதற்கு என்ன உத்தரவாதம்? இந்த விஷயத்தில் இற்றைக்குச் சில மாதகாலத்துக்குமுன் ஸிந்துமாகாணத்தில் நிகழ்ந்த அரசியற் சதுரங்க ஆட்டமும், இன்று வடமேற்கெல்லைப்புறத்தில் நிகழும் நாடகமும் எம் கண்ணைத் திறக்க வேண்டும். எனவே, காங்கிரஸ்வாதிகளுக்கிடையே பூரண ஒற்றுமை கடைசிவரை நிலவவேண்டுமானால், காங்கிரசுக்கு வெளியேயுள்ளவர்கள் கேந்திரப்பதவிகளில் இருந்து "கோடரிக்காம்புத்" தர்பார் நடாததாது இருக்கவேண்டுமானால், தமிழ்க்காங்கிரஸ கட்டாயம் மந்திரசபையைக் கைப்பற்றவே வேண்டும்.

O

### உண்மையான இராஜதந்திரம்

இராஜதந்திரத்தை ஒட்டி, நாம் எதிரியின் கோட்டையைக் கைப்பற்றி அங்கே எமது கைவரிசையைக் காட்டவேண்டும். அப்படிப் பதவி ஏற்கும்படி மிஸ்ரர் சேனநாயக்காவோ, வேறும் சிங்களத் தலைவரோ கேட்பாரானால், நாமும் அவர்கள் புறக்கணிக்க முடியாத நிபந்தனைகளை விதிக்கவேண்டுமேயன்றி எட்டிக்குப் போட்டியாக வீம்புபேசக்கூடாது. தமிழ் மக்களுக்கு இன்று ஓர் நெருக்கடியான காலம் ஏற்பட்டிருக்கிறது. அத்துடன் எங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டிருக்கிறது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, எங்கள் நியாயமான கோரிக்கைகளில் எதிரியைத் திருப்திப்படுத்தி ஒருவாறு அவனுடைய கோட்டைக்குள் நுழைந்துவிடவேண்டும். நுழைந்து பதவியில்இருந்துகொண்டு 'கோடரிக்காம்பு" களுக்கிடம் கொடுக்காமல், அப்பதவிகளை ஸதிரப்படுத்திக்கொண்டு, எங்கள் கொள்கைகளை ஒவ்வொன்றாகப் பெறல்வேண்டும். அந்தக் கோரிக்கைகளுக்குச் சிங்களத்தலைவர்கள் இணங்காதபட்சத்தில் அவர்களுடைய கருமங்களுக்கு. உள்ளிருந்துகொண்டே முட்டுக்கட்டையிட்டு வரல் வேண்டும்

O

### காங்கிரசும் சேவையும்

பொதுஜனங்களுக்கு உண்மையான சேவை செய்வதறகுத்தான் காங்கிரஸ் ஸ்தாபிக்கப்பட்டதென்றால், அச்சேவையை ஆற்றக்கூடிய ஸ்தாபனங்களை நாம் கைப்பற்றவேவேண்டும். அரசியல் மன்றங்களிலே ஐம்பதுக்கைம்பது கிடைத்தால் என்ன? விட்டால் என்ன? ஏழை மக்களின் மூலாதாரக் குறைகள் போக்கப்பட வேண்டும். மக்களின் வாழ்க்கைநிலை உயரவேண்டும். இன்று இலங்கையின் நிலைமை என்ன? லட்சக்கணக்கான மக்கள் நித்திய தரித்திரத்தில் உழன்று சேவலம் அகிழான் புற்றைத் தோண்டி நெல்பொறுக்குகிறார்கள். கஞ்சி வரதப்பா என்றால் எங்கே வரதப்பா என்று ஏங்குகிறார்கள் லட்சக் கணக்கான மக்கள் பசியால் நலிந்து, தம் வயிற்றை இறுகக் கட்டுகிறார்கள். பிச்சை எடுத்துண்ணவோ அவர்களுடைய மானம் [illegible] இவ்வு[illegible] டவன்மீது பழிபோட்டுக் கண்ணீருங் கம்பலையுமாகக் காலங்கழிக்க ஓர் சிலர் அறுசுவை யுண்டியருந்தி, அம்சதூளிகா மண்டபத்தில் பஞ்சு மெத்தையிற் பாவையர் கால்வருடப் பள்ளி செய்கின்தனர். இந்த அநியாயச் சமூக அமைப்பு மாற்றப் படுதல்வேண்டும் 'தனி ஒருவனுக்குணவில்லை எனில் இந்தச் சகத்தினை அழித்திடுவோம்" என்று சங்கநாதம் செய்து, இந்தப் பொல்லாத அநியாய சமூக அமைப்பை மாற்றி, இந்த நாட்டின் வளத்தை சமமாகப் பங்கீடுசெய்ய, மந்திரசபையில் இருந்தே எம் காங்கிரஸ்வாதிகள் கருமம் ஆற்றவேண்டும். வாய்ப் பேச்சளவில், சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் பேசும் காலம் போய்விட்டது. அந்தச் சமத்துவத்தை நடைமுறையில் இங்கே கொண்டுவரவேண்டும். மக்களின் பஞ்சத்தைப் போக்கவேண்டும்; பட்டினியைத் தீர்க்கவேண்டும்; அவர்கள் தொழிலற்று 60 வயதுக்கு மேற்பட்ட காலத்தில் பென்ஷன் எனப்படும் உபகாரப்பணம் அவர்களுக்கு அளிக்கவேண்டும். இடையில் அவர்கள் தொழிலற்று இருக்கும்போது அரசாங்கம் உதவி செய்ய வேண்டும். அவர்கள் நோயுற்ற காலத்தில் அரசாங்கம் உதவி செய்யவேண்டும். "பென்ஷன்" என்றால் இந்தக்காலத்திலே ஆபத்துதவிச் சங்கம் கொடுக்கும் பிச்சைச் சம்பளமல்ல; ஒருவன் தன் வயோதிப வயதில் தன் குடும்பத்தைச் சம்ரட்சிப்பதற்குப் போதிய அளவுக்கு அந்த பென்ஷன் இருக்க வேண்டும் ஓர் கிளெறிக்கல் உத்தியோகத்தர் 60 வயதில் 200 ரூபா உபகார வேதனம் பெற்றால, அதிலும் குறைந்த தொகை ஏன் ஓர் சாதாரண மனிதனுக்குக் கொடுக்கப்பட வேண்டும்? இந்தக் கிளெறிக்கல் உத்தியோகத்தன் நாட்டின் வளர்ச்சிக்கு எவ்வளவு அவசியமாயிருந்தானோ அவ்வளவு அவசியமாக ஓர்தொழிலாளி இருக்கவில்லையா? ஓர் உத்தியோகத்தன் பெறும் பென்ஷன் அளவு தொகை கட்டாயம் ஓர்தொழிலாளிக்கும் கொடுக்கப்படவேவேண்டும். ஓர் நாட்டின் அபிவிருத்திக்கு ஓர் உத்தியோகத்தனும் பாடசாலை ஆசிரியனும் எவ்வளவு அவசியமானவர்களோ, அவ்வாறே ஓர் தொழிலாளியும் அவசியமானவன் என்பதை எம் தமிழ்க் காங்கிரஸ்வாதிகள் சிந்தித்து, அந்த உத்தியோகத்தனும், ஆசிரியனும் எந்த எந்தச் சலாக்கியங்களைத் தம் அரசாங்கத்திடமிருந்து பெறுகின்றனரோ, அதே சலாக்கியங்களை இந்தத் தொழிலாளியும் விவசாயியும் பெற உடன் கருமம் ஆற்றவேண்டும் அப்படிக் கருமம் ஆற்றுதற்கு மந்திரசபையில் தமிழ்க் காங்கிரஸ் இடம்பெறவேண்டும்.

கடிதம்

## தேசீயக் கொடி

ஐயா,

தேசியக் கொள்கையுடைய ஓர் நாடு அதன் கொள்கைகளையும் லட்சியங்களையும் புலப்படுத்துவதற்காக ஓர் தேசியக் கொடியைக் கையாளுவது இயல்பு. நம் தாய்நாடாம் இந்தியா சுதந்திரம் அடைந்ததும் அதற்கென ஓர் தேசியக்கொடி இந்தியத் தலைவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அக்கொடி இந்தியாவின் லட்சியங்களையும் கொள்கைகளையும் அகிம்சா தர்மத்தையும் காட்டுகிறது. அக்கொடி எல்லாச் சாதியாருக்கும் எல்லா மதத்தினருக்கும் பொதுவானவாய் இந்தியா எங்கணும் பறந்துகொண்டே இருக்கிறது மக்கள் தாயின் மணிக்கொடியைத் தாழ்ந்து, பணிந்து, வணங்கி வருகின்றார்கள். சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னும் ஓர் பொதுவான தேசியக் கொடியையே இந்தியா வைத்திருந்தது.

இத்த நிலைமையில் நம் இலங்கைக்கும் சுதந்திரம் வரப்போகிறது. இத்தருணத்தில் இலங்கைக்கு ஓர் தேசியக் கொடியை ஏற்படுத்துதல் அவசியம். இத்தகைய கொடி ஒன்றை அமைக்கும் விஷயத்தில் சாதி சமய பேதத்தை, பெரும்பான்மை, சிறுபான்மை என்றும் பேதத்தைக்காட்டாமல் இலங்கைத் தலைவர்கள் ஒன்றுகூடி ஓர் கொடியை ஏற்படுத்துதல் மிகவும் சிறந்தது. தனிப்பட்ட ஒரு சாதியினரைக் குறிக்கும் உதாரணமாகச் சிங்களச் சகோதரர்கள் கூறும் சிங்கக்கொடி இலங்கையின் தேசியக் கொடியாக இருக்க இயலாது. இந்தியாவின் கொள்கைகளையும் லட்சியங்களையும்கொண்ட ஓர் பொதுக் கொடியே இலங்கையின் தேசியக் கொடியாக வரவேண்டும். இவ்வாறான ஓர் கொடி இல்லாதுவிடின் வகுப்பு வாதம் இலங்கையில் தலைவிரித்தாடும். தனிப்பட்ட ஓர் கொடியைக்கொண்டு தேசியம் தேசியம் எனச் சிறுபான்மையோரைப் பெரும்பான்மையோர் ஏமாற்றமுடியாது, தேசியக்கொடியை விரைவில் பறக்கவிடுவதாக திரு. சேனநாயக்கா தெரிவித்து இருக்கிறார். சிங்கக்கொடியையே அவர் தேசியக்கொடியாக்குவாராயின் அவர் ஓர் வகுப்புவாதத் தலைவரேயாவர்.

இங்ஙனம்
செ. சுப்பிரமணியம்

## எதிர்க்கட்சித் தலைவர்

புதிய பாராளுமன்றத்தில் மிஸ்ரர் சேனநாயக்காவின் ஐக்கிய தேசீயக் கட்சியினரும் சுயேச்சை வாதிகளும் சேர்ந்தே மந்திர சபையை அமைத்து ராஜ்ய பரிபாலனத்தை நடத்துவர் என்று இப்போது தீவிரமாக யூகிக்கப்படுகிறது. அப்படி நடந்தால் எதிர்க்கட்சித் தலைவர் யார் என்ற பிரச்சினை இப்போது கிளம்பியிருக்கிறது. பிரிட்டிஷ் பாராளுமன்றத்துச் சம்பிரதாயப்படி, அரசியலை நடாத்தும் பிரதம மந்திரிக்கு அடுத்தபடியாக மிகவும் முக்கியமானவர் எதிர்க்கட்சித் தலைவர்தான் பல விஷயங்களில் பிரதம மந்திரி எதிர்க்கட்சித் தலைவருடன் கலந்தாலோசிக்கவேண்டி ஏற்படும்.

இலங்கைப் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர் யார்? சுயேச்சைவாதிகளை விடுத்து, அதிகபலம் உடைய கட்சி சமசமாஜக்கட்சிதான். அதன் தலைவர் டக்ரர் என். எம். பெரீரா. ஆனால் சமசமாஜிகளுடன் நெருங்கிய தொடர்பு பூண்டுள்ள போல்ஷெவிக் லெனின்கட்சித் தலைவர் டக்ரர் கொல்வின் ஆர். டி. சில்வா, தமக்கே எதிர்க்கட்சித்தலைவர்ப்பதவி கிடைக்கவேண்டுமென்றும் வாதாடலாம். இரண்டாவதாகத் தமிழ்க் காங்கிரஸ் அதிக எதிர்ப்பாளர்களைக் கொண்டுள்ளது. அதன் தலைவர் திரு. ஜீ ஜீ பொன்னம்பலம்; தமிழ்க் காங்கிரசும், இந்தியக் காங்கிரசும் தங்கள் கட்சிபேதத்தை ஒழித்து ஒரே கட்சியாகுமென்றால், திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் எதிர்க்கட்சித் தலைவராவதற்கு நல்ல உற்பாதங்கள் உண்டு. ஆனால் அது நிகழும் கருமமா?.


சிவமயம்

காரைநகர்ச் சைவ மகாசபை

அஹிம்சாமூர்த்தி காந்தியடிகளின்
ஜெனனதினக் கொண்டாட்டம்

2—10—47 வியாழக்கிழமை மாலை ஆறரைமணியளவில்
சபை மண்டபத்தில் நடைபெறும்

ஊர்வலம் பிற்பகல் நாலரைமணியளவில் மடத்துக்கரைச் சந்தியிலிருந்தும், வியாவிற் சைவபரிபாலன வித்தியாலயத்திலிருந்தும் புறப்பட்டு 6 மணியளவில் சபை மண்டபத்தைச் சேரும்.

[அன்பர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்]

காரைநகர்,
26—9—47.

அ. தேவராசா,
காரியதரிசி.

Mis 140 26—9—47.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐயனர் மகத்துவம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

வர்களை வலிதிற் கூடுபவள்; முன்னொருபோது, கோபத்திலும் சாபத்திலும் மிக்க துருவாச முனிவரை வலிதிற் கூடி, வில்வலன், வாதாவியென்னும் இரு புதல்வரைப் பெற்றவள்; அந்த இரு மக்களும் காட்டு மார்க்கத்திலே நின்று அவ்வழியால் வரும் முனிவர் முதலானோர்க்கு இடையூறு செய்து அவர்களைக் கொன்றுவந்தனர்; இப்படியாக அகத்திய மகாமுனிவர் அந்த மார்க்கமாக வருதலும் அசமுகியின் புதல்வர் இருவரும் அம்முனிவரைக் கொல்ல முயன்றபோது, முனிவர் அவர்கள்செய்த வஞ்சனையை உணர்ந்து, தாமே அத்துஷ்டரிருவரையும் கொன்றனர்;

அந்த அசமுகியானவள் ஒருதினம் தன் கையிலே சூலத்தைப் பிடித்தவளாய்த் தனது தோழியாகிய துன்முகியுடனே அச்சீகாழிப்பதி மார்க்கமாகச் செல்லும்போது, ஒரு அழகிய தண்ணிய பூஞ்சோலை அவளின் கண்களுக்குப் புலப்பட்டது; அதனைக் கண்ணுற்ற அசமுகி அப்பாற் செல்லாது நின்று தன் பாங்கியாகிய துன்முகிக்குக் காட்டி, "சகியே, அங்கே காணப்படும் அந்தப் பூஞ்சோலை அபூர்வமானது; சுவர்க்கலோகத்திலுள்ளதாகிய பூஞ்சோலையை, இந்திரன் கொண்டுவந்து இங்கே வைத்திருத்தல்கூடும்; நல்லது. இந்தச்சோலையின் சமீபத்திலே போய், இதன் சிறப்பையும், இதன்கண் யார் வசிக்கின்றனரென்பதையும் பார்ப்போம், வருதி" என்று அவளையும் உடன் கூட்டிக்கொண்டு அப்பூஞ்சோலைக்குச் சமீபமாகச் செல்வாளாயினாள்.

அசமுகி தன் சேடியுடன் அச்சோலையை நோக்கி வருதலை, ஐயனாருடைய படைத்தலைவராகிய வீரமாகாளர் கண்டு, "எவளோ, ஒருகொடிய அசுரப்பெண் இங்கேவருகின்றாள்; சூரனது தங்கையாகிய அசமுகி யெனப்படுவாள் இவள்போலும்; என்ன நோக்கத்துடன் இவள் இங்கு வருகின்றாளென்பதுபுலப்படவில்லை; இவள் இச்சோலையுள் வந்து புகுந்து ஏதாயினும் அடாத கருமஞ் செய்வளேல் இவளை 'உடனுக்குடனே தக்கபடி தண்டிப்பேன்' என்று எண்ணிக்கொண்டு தம்மை அவர்களிருவரும் காணாதவாறு மறைந்து, தாம் அவர்கள் செயலை அவதானித்தபடி நின்றார்.

(வரும்)

## நான் ஏன் ஹிந்துவானேன்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

துடன் புத்தகங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. ஷெ கொள்கைகளை எதிர்த்த சன்னியாசிகள் காலால் மிதிக்கப்பட்டனர்; திருச்சபைச்சரித்திரம் படித்தவர்களுக்கு இவ்விஷயங்கள் நன்கு தெரிந்திருக்கக்கூடும்.

கி. பி. 421ல் எவிஸஸ்சபை கூடியது. இச்சபையில் செய்யப்போகும் முடிவுகளே உண்மைக்கொள்கைகள் இதன் எதிர்ப்பாளர்களை எமலோகத்திற் கனுப்புவோமென்று மடாதிபதிகளும் பாதிரிகளும் கூச்சல்போட்டார்கள். பேச்சு நடந்துகொண்டிருக்கும்போதே ஒருவருக்கொருவர் அபிப்பிராய பேதத்தினால் சண்டைமூண்டு 137 பேர் கொல்லப்பட்டனர். பலமுள்ள கட்சியினர் தங்கள் கொள்கைகளை உண்மையென நிலைபெறச் செய்தவித மிதுவாகும் தொடக்கத்திலிருந்து நாளதுவரை மனவுரிமையும் பேச்சுரிமையும் சிதைக்கப்பட்டு வந்திருக்கிறது. கொள்கையைப்பற்றி அபிப்பிராயம் கூறுவது தவறு, ஆராய்ந்து பேசுவது தவறு.

(வரும்)

## திருச்சி ரேடியோ

**சனி செப்டம்பர் 27**

காலை 7-15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி கே பாலகிருஷ்ண ஐயங்கார் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வி கே சௌந்தரராஜன் வயலின் 8-30 சித்திரகானம் இசைத்தட்டு 9 முடிவு.

1 வி கே சௌந்தரராஜன் வயலின் 1–30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2-05 சர்வகலாசாலைக் குறிப்பு 2-15 காஞ்சீபுரம் வி வி கிட்டப்பா பாட்டு 2-45 முடிவு

மாலை 5 டி கே பாலகிருஷ்ண ஐயங்கார் பாட்டு 5-40 பெரியபுராண விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 காஞ்சீபுரம் வி வி கிட்டப்பா பாட்டு 7-15 ராணுவத்திலிருந்து திரும்பியவர்களுக்கு வசதிகள் 7-30 தமிழில் செய்திகள் 7 45 என் பினாகபாணி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 அன்றில் நாடகம் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் 9-45 வியோலா. சாக்ஸபோன் 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு.

**ஞாயிறு செப்டம்பர் 28**

காலை 7.15 ஆரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 வி கமலா பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 கே பி சுந்தராம்பாள் இசைத்தட்டு 8.30 ஸ்ரீரங்கம் கோவிந்த ஐயங்கார் வீணை 9 முடிவு

12 ஷாஜஹான் கதைப்பாட்டு 12 30 தணல் சந்தனம் முகப்புச் சித்திரம் 12-35 மானேஜர் இஷ்டம்போல் நாடகம் 12-45 அரக்கு மாளிகை 1 மலர்மலர் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சேலம் ஜி தேசிகன் ஒலிப்பதிவு 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை 5 வி கமலா பாட்டு 5-40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஸ்ரீரங்கம் கோவிந்த ஐயங்கார் வீணை 7-30 தமிழில் செய்திகள் 7-45 மதுவிலக்கு ஆங்கிலப் பேச்சு 8 தஞ்சாவூர் எம் தியாகராசன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆங்கிலத்தில் பேச்சு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 இருவயலின்கள் 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு.

**திங்கள் செப்டம்பர் 29**

காலை 7-15 ஆரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7 30 மன்னார்குடி எஸ் வைத்தியநாதபிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 புதிய பாடல்கள் 8 30 கே வாசுதேவன் பாட்டு 9 முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1- 0 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பந்தணை நல்லூர் எம் முத்தையாபிள்ளை வயலின் 2 தமிழில் செய்திகள் 2 05 பந்தணை நல்லூர் எம் முத்தையாபிள்ளை வயலின் 2 15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு

மாலை 5 மன்னார்குடி எஸ் வைத்தியநாதபிள்ளை நாகஸ்வரம் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 சுயநிர்ணய சமுதாயம் 8 பந்தணை நல்லூர் எம் முத்தையாபிள்ளை வயலின் 8-30 கே வாசுதேவன் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குர்ஷித் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 டி பி ராமகிருஷ்ணன் பாட்டு 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு.

**செவ்வாய் செப்டம்பர் 30**

காலை 7-15 ஆரம்பம் 7.20 தமிழில் செய்திகள் 7-30 டி ஆர் துரைவேல் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 வாத்ய இசை இசைத்தட்டு 8 30 தஞ்சாவூர் எம் ஹம்ஸவல்லி பாட்டு பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 தஞ்சாவூர் எம் ஹம்சவல்லி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 தஞ்சாவூர் எஸ் ஹம்ஸவல்லி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 தஞ்சாவூர் எம் ஹம்சவல்லி பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 டி ஆர் துரைவேல் பாட்டு 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6–15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7-15 தாளவாத்யக் கச்சேரி 7-30 தமிழில் செய்திகள் 7-45 பல்லடம் வி சஞ்சீவராவ் புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9 15 மதுரை மணி ஐயர் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஜே எஸ் அப்துல்கனி விதார் 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10-30 முடிவு.

## யாழ்ப்பாண நகரசபை விளம்பரம்

இதன்பின்னர் சொல்லப்படும் சந்தைகளும் காலையும் பெரியகடைக்குக் கிட்ட இருக்கும் பஸ் ஸ்ராண்டும் 1948-ம் ஆண்டு தை மாதம் 1-ந் திகதி தொடக்கம் ஒரு வருஷத்திற்குக் குத்தகையாகக் கொடுப்பதற்குக் கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்பட்டு இருக்கின்றன. 1ம் 6ம் குத்தகைகளுக்கு 500 ரூபாயும் 2–ம் 3 ம் 4-ம் குத்தகைளுக்கு 250 ரூபாயும் மற்றச் சந்தைகளுக்கு 50 ரூபாயும் கட்டி எடுத்த போமில் கேள்வி கேட்கவேண்டும். கேள்விப்பத்திரங்கள் ஒரு கடதாசிக் கூட்டில் அடைக்கப்பட்டு கூட்டின் மேல் பக்கத்தில் இடதுபுறமாய்ச் 'சந்தைக் குத்தகையின் கேள்விப் பத்திர"மென்று எழுதி அதை நகரசங்கத் தலைவருக்கென விலாசம்போட்டு 1947-ம் ஆண்டு ஐப்பசி மாசம் 24-ந் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்குப் பிந்தாமல் நகரசபைக் கந்தோருக்கு அனுப்பப்படல்வேண்டும் ஒவ்வொரு குத்தகைக்கும் பிறம்பான கேள்வி கேட்கவேண்டும். சபையால் தெரியப்பட்ட கேள்விக்காரன் சங்கத் தலைவரால் நியமிக்கப்படும் தொகையை தெரியப்பட்ட திகதி தொடக்கம் 3 நாளைக்குள் கேள்வித் தொகையில் மூன்றில் ஒன்று கட்டவேண்டும். 1947-ம் ஆடி மார்கழி மீ 1ம் திகதிக்குமுன் கேள்வித் தொகையில் மூன்றில் ஒன்றில் முன் கட்டப்பட்ட தொகையை நீக்கி மிகுதித் தொகையை முழுமையாகவே 5-ம் 7-ம் 8-ம் 9-ம் 10–ம் சந்தைகளுக்குக் கட்டவேண்டும். மற்றச் சந்தைகளுக்கு குத்தகைகாரர் ஒவ்வொருவரும் நொத்தாரிசுச் செலவும் முத்திரையும் தான் பொறுத்து 1947-ம் ஆண்டு மார்கழி மாசம் 1ம் திகதிக்கு முன்பிணை உறுதியும் எழுதிக் கொள்ளவேண்டும். இதன் நிமித்தமாக 1ம் 2ம் 3ம் 4ம் 6ம் குத்தகைகளுக்குக் கேள்வி கேட்கும் போமுக்குக் கட்டும் காசுடன் இன்னும் ஒரு 100 ரூபாய் ஒவ்வொரு குத்தகைக்கும் கட்டவேண்டும். அப்படிக் காசுகட்டத் தவறினுல் போம் கொடுக்கப்படமாட்டாது.

மிகுதியான தொகையை 8 சரிபங்காய்ப் பிரித்து 8 மாதத்தில் கட்டவேண்டும். ஒவ்வொரு மாதமும் 15–ந் திகதிக்குமுன் கட்டவேண்டும். முதல் கட்டு 1948-ம் ஆண்டு தை மாதம் 15 ந் திகதிக்குமுன்னும் குத்தகையைப்பற்றிய விபரங்கள் அடங்கிய நிபந்தனைகளில் சொல்லியபிரகாரம் கட்டவேண்டும். அப்படிக் காசுகட்டத் தவறினுல் அல்லது சொல்லப்பட்ட திகதிக்குள் பிணை உறுதி எழுதப் பிந்தினுல் கட்டிய முழுத்தொகையும் பறிமுதலாய்ப் போய்விடும். குத்தகையும் திரும்ப விற்கப்படும்,

சபைக்கு எந்தக் கேள்வியையாகுதல் அல்லது எல்லாக் கேள்வியையும் விலத்தி விட அதிகாரமுண்டு. நிபந்தனைகள் இந்தக் கந்தோரில் ஒட்டப்பட்டு இருக்கின்றது. இன்னும் மேலதிகமான விபரங்களை சபைக் காரியதரிசியிடம் அறிந்து கொள்ளலாம். சந்தைக்குள் இப்பொழுது அறவிடப்படும் விகிதங்கள் குறைக்கப்படமாட்டாது. சபைத் தலைவருக்கு சந்தைக்குள் வெவ்வேறு வியாபாரத்துக்கு வெவ்வேறு இடங்கள் வகுத்து வைக்க அதிகாரமுண்டு. குத்தகைகாரரும் கீழ்க்குத்தகைகாரரும் சபைத் தலைவரின் தீர்மானத்திற்குக் கட்டுப்படல்வேண்டும்.

### சந்தைகள்

1 பெரியகடை நாலுபக்கமும் ரோட்டு (தகரக் கொட்டில்கள் பிறநீங்கலாக) அத்துடன் தகரக்கொட்டிலுக்கும் ரோட்டுக்கும் இடையிலுள்ள வெளி இடமும் பிறநீங்கலாக. அத்துடன் புத்தகசாலைகளும் சர்பத்சாலைகளும் பிறநீங்கலாக.

2 பெரியகடைக்குக் கிட்ட இருக்கும் மீன்கடையும் (பண்ணைத் துறையில் மீன் விற்கும் இடமும்.)

3 சின்னக்கடை — (இறைச்சிக் கடைகள் பிறநீங்கலாக)

4 செங்குந்தர்சந்தை இரண்டு அறைகளுடனும்.)

5 சிவியாதெருச் சந்தை — பாஷையூர் கடற்கரையில் மீன் விற்கும் இடமும். (அறைபிறநீங்கலாக).

6 பெரியகடைக்குக் கிட்ட இருக்கும் காலையும் பஸ் ஸ்ராண்டும்,

7 தட்டாதெருச் சந்தை — (சிவப்பிரகாசம் ரோட்டு தச்ச ஒழுங்கைச் சந்தியில் காய்பிஞ்சும் மீன் விற்குமிடமும் பிறநீங்கலாக). அத்துடன் தட்டாதெருச் சந்தையில் மேற்குப் புறமாக தில்லையம்பலத்துக்குக் கொடுத்த 2 பரப்பு நிலமும் பிறநீங்கலாக.

8 முத்திரைச்சந்தை.

9 கொழும்புத்துறைச்சந்தை.

10 நாவாந்துறைச் சந்தை,

க. பொன்னம்பலம்
நகரசபைத்தலைவர்.

நகரசபைக் கந்தோர்
யாழ்ப்பாணம்
20—9—47-ம் ஆண்டு.

G 100 26—9—47.


மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

# கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச்செலவு எல்லாம் உட்பட நாகபட்டனமிருந்து பினங் செல்ல டெக் ரிக்கற் ரூபாய் 130 க்கு எங்கள் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

பல் நூற்றுக்கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்து கொடுத்த நற்சாட்சிகள் அநேகம் உண்டு.

**வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்**

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, காங்கேசன்துறைரோட்
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தந்தி (Srivel)
பிராஞ்சு: நாகபட்டணம்.

Std 3 2—9—47&28.2.48


## இன்னோர் தேர்தல் வழக்கு

கண்டித்தொகுதியில் இருந்து வெற்றிபெற்ற சுகாதார மந்திரி மிஸ்ரர் ஜோர்ஜ். ஈ. டீ. சில்வாவுக்கு விரோதமாக அவருடன் போட்டியிட்டுத் தோல்வியுற்ற மிஸ்ரர் ரீ. பீ. இலங்கரத்தின என்பவர் ஓர் தேர்தல் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் வானத்திலே

## நடக்கும் பலவித மாற்றங்கள்

(நமது விசேஷ நிருபர்)

சென்ற புதன்கிழமை யிரவு மிஸ்ரர் சேனநாயக்கா தனது எதிர்கால அரசியலமைப்பு விஷயமாக ரேடியோமூலம் செய்த பிரசாரணம் இங்குள்ளார் பலர்க்கு அதிர்ப்தியையும் ஏமாற்றத்தையும் ஆத்திரத்தையும் விளைத்திருக்கின்றதெனலாம். எது எப்படியிருந்தபோதிலும் பழையவற்றையெல்லாம் மறந்து மிஸ்ரர் சேனநாயக்கா பரந்த நோக்கம் கொண்டு தமிழ்மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான தமிழ்க் காங்கிரஸ்வாதிகளையும் தம் மந்திரசபையிற் சேர்ப்பர், இந்த நேரத்திலாவது தமது அரசியல் ஞானத்தை, பரந்த மனப்பான்மையைக் காட்டுவர் எனக் காங்கிரஸவாதிகள் எதிர்பார்த்திருந்ததற்கு விரோதமாக மிஸ்ரர் சேனநாயக்காவின் பிரசாரணம் அமைந்திருந்தது. மிஸ்ரர் சேனநாயக்கா தமிழ்க் காங்கிரசின் ஒத்துழைப்பை விரும்பவில்லை, நேர்மாறாக, தமிழ்க் காங்கிரஸ் ஓர் வகுப்புவாத ஸ்தாபனம் என்பதை மறைமுகமாகச் சொல்லிக் காட்டியிருக்கிறார். ஒரேகட்சியரசினை இந்த நாட்டில் மீண்டும் ஒருமுறை ஸ்தாபித்துச் சர்வாதிகாரம் நடாத்த மிஸ்ரர் சேனநாயக்கா முனைந்துள்ளார் என்று காங்கிரஸ் வாதிகள் கூறுகிறார்கள்; ஆனால் காங்கிரஸ் வாதிகளுக்கு நம்பிக்கையில்லாமலில்லை: கூடிய சீக்கிரத்தில் எதிர்க்கட்சிகள்யாவும் ஒன்று சேர்ந்து மிஸ்ரர் சேனநாயக்காவின் அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியும் என்று அவர்கள் கருதுகின்றனர்.

இவர்கள் அபிப்பிராயம் இவ்வாறாக, இங்குள்ள ஐ. தே. கட்சியினர் மிஸ்ரர் சேனநாயக்காவின் கூற்று முற்றிலும் சரியானதே யென்றும், யாழ்ப்பாணத் தமிழ்மக்களின் பிரதிநிதிகள் மந்திரசபையில் இடம் பெறாது விட்டால் அதற்குப் பொறுப்பாளி தமிழ்க் காங்கிரஸதான் என்று இவர்கள் கூறுகிறார்கள்.

### மந்திரிகள் யார்?

மந்திரசபையில் பழையவர்களான மிஸ்ரர் பண்டாரநாயக்கா, மிஸரர் கொத்தலாவலை, மிஸ்ரர் ஜோர்ஜ ஈ டி. சில்வா என்பவர்கள் இடம் பெறுவர் என்பது இப்போது நிச்சயமாகி விட்டது. தனக்கும் ஓர்மந்திரிப்பதவி வேண்டும் என்று மிஸ்ரர் குணசிங்ஹ நெருக்குகிறார், அவருடைய கோரிக்கை அநேகமாக நிறைவேறலாம். மற்ற ஏழுபேரில், இருவர் மேற்சபையிலிருந்து தெரியப்படுவர். ஸ்ரீமான் சுந்தரலிங்கம் ஜனுப் ரீ பீ. ஜயா, மிஸ்ரர் ஈ. ஏ. நுகவெலே, மிஸ்ரர் ஏ. ரத்நாயக்கா, மிஸ்ரர் ஜே. ஆர். ஜெயவர்த்தன என்பவர்களும் அநேகமாகமந்திரிகளாவர் நிதி மந்திரிப் பதவியை யாருக்கு வழங்கலாம் என்பதுபற்றி இன்னும் நிச்சயமாக முடிவு செய்யப்படவில்லை என்று தெரிகிறது. ஸ்ரீமான் சுந்தரலிங்கம்தான் நிதி மந்திரியாகலாம் என்று கொழும்புப்பத்திரிகைகள் ஜோசியம் கூறுகின்றன. ஆனால், இந்தப் பிரதான பதவியை மிஸ்ரர் சேனநாயக்கா ஸ்ரீ சுந்தரலிங்கத்துக்கு வழங்குவாரோ என்ற ஓர் சந்தேகம் சிலர் மனத்தில் எழுந்திருக்கிறது. ஆனால் கீழ்ச்சபையில் உள்ள ஒருவர்க்கே அப்பதவி வழங்கப்பட வேண்டும்.

### அவர் யார்?

பாராளுமன்றத்துக் கீழ்ச்சபையில் நியமன ஸ்தானங்கள் 6 உள. ஐரோப்பியர்க்கு 3 ஸ்தானங்களும், பறங்கியர்க்கு 3ஸ்தானங்களும், அந்த ஆறு ஸ்தானங்களில் வழங்கப்பட வேண்டுமென்று முன்னர் ஒப்புக்கொள்ளப்பட்டது. இப்போது ஓர் பறங்கியர்—மிஸரர் பீற்றர் கெனமன் — தெரிவு செய்யப்பட்டு விட்டார். ஆகவே, இன்னும் இரண்டு ஸதானங்களைப் பறங்கியர்க்கு வழங்க மிஸரர் சேனநாயக்கா தயாராகவில்லை. ஒரு ஸதானத்தையே பறங்கியர்க்கு வழங்கி, பாக்கியுள்ள இரு ஸதானங்களில் ஒன்றை சேர். ஒலிவர் குணத்திலகாவுக்கு வழங்கிப் பின் அவரை நிதிமந்திரியாக்கலாம் என்று விஷயமறிந்தவர்கள் கூறுகிறார்கள். ஸ்ரீ சுந்தரலிங்கம் வேறு மந்திரப்பதவியை வகிக்கலாம், ஏனைய இரண்டு மந்திரப் பதவிகளில் ஒன்று "செனேற்"றில்ஸ்ரீமான் மகாதேவாவுக்கு அல்லது ஸ்ரீ வி. குமாரசுவாமிக்கு வழங்கப்படலாம் என்றும், அடுத்தது பிரபல வழக்கறிஞரும் சட்ட நிபுணருமான மிஸ்ரர் டக்ரர் எல். ஏ. ராஜபக்ஷிக்கு வழங்கப்படும் என்றும் அறிகிறேன்.

தமிழ்க் காங்கிரசின் பேராதாவாளரான ஸ்ரீ இ. சிவகுருநாதர் அவர்கள் செனேற் சபையில் காங்கிரஸ் பிரதிநிதிகளின் 7 வாக்குச் சம்மதங்களினுலும் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று தெரிகிறது. ஸ்ரீ சிவகுருநாதரின் அனுபவமும், நெருக்கடியேற்படுங் காலங்களில் அவருக்கு இயல்பாயுள்ள சாந்த குணமும், செனேற் சபையில் யாவர்க்கும் உதவியாகவிருக்கும் என்பதைக் கட்சிபேதமற்றவர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

செனேற் சபையில் சேர், மகமத் மக்கான் மரைக்கார் நியமனப் பிரதிநிதிகளில் ஒருவராவர் என்றும், செனேற் சபைத் தலைவராக அவர் வருதல்கூடும் எனவும் யூகிக்கப்படுகிறது. கீழ்ச்சபைக்கு மிஸ்ரர் மொலமுரேதான் அநேகமாகத் தலைவராகத் தெரிந்தெடுக்கப்படுவர்.

உதவி மந்திரிகளாக, ஸ்ரீ வி. நல்லையா, மிஸ்ரர் டட்லி சேனநாயக்கா திரு. ஸி சிற்றம்பலம் முதலியோர் நியமிக்கப்படலாம்.

பாராளுமன்றத்து எதிர்க்கட்சிகள் விஷயமாக நான் ஓர்பிரபல இலங்கை இந்தியக் காங்கிரஸ்வாதியைக் கண்டு சமபாஷித்தேன். இலங்கை-இந்தியக் காங்கிரஸ் சார்பாகத் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் அநேகமாக இந்திய அரசாங்கத்தின் இலங்கைப் பிரதிநிதியாகவுள்ள ஸ்ரீஜுத் வி. வி. கிரியின் ஆலோசனைப்படிநடப்பார்களேயன்றி மற்றும் கட்சியினர் அதிகாரத்துக் குட்பட்டு நடக்கமாட்டார்கள் என்று இப்பிரமுகர கூறினர். இலங்கை— இந்தியா என்னும் இரு நாடுகளுககு மிடையேயுள்ள பிரச்சினை சமரசமாகத்தீர்க்கப்படவேண்டியிருக்கிறது; அந்தவேலையைச்செய்வதில் கஷ்டம் ஏற்படாதபடி இந்தியப் பிரதிநிதிகள் நடக்கவேண்டும் இந்தியப் பிரதிநிதிகள் அதிகாரம் வகித்துள்ள கட்சியுடன் ஒத்துழைத்தால் சமரசப் பேச்சுக்கள் சுலபமாகும். ஆகவே இவ்விஷயம் சமரசமாகத் தீர்க்கப்படும்வரைக்கும் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து சேனநாயக்கா அரசாங்கத்தைக் கலைக்க முயற்சி செய்யக்கூடாது, அதன் பயனாக மனக்கசப்பை அதிகரிக்கக்கூடாது என்று ஸ்ரீஜுத் கிரி ஆலோசனை கூறுவர் என்று இந்தப் பிரமுகர் கூறினர். எனவே இப்போதுள்ள நிலையில் ஸ்திரமான எதிர்க்கட்சிகள், தமிழ்க்காங்கிரசும் இடதுசாரிக் கட்சிகளுமே யாகும்.

## உலகம்பலவிதக் கதை

2ம் பக்கத் தொடர்ச்சி

களிலுஞ் சஞ்சரிப்பவர்போற்காணப்படுகிறார்; அவர் மூலமாக எங்கள் அக்கா அண்ணனென்னு மிவர்களுடைய அத்தானைப்பற்றி ஏதும் அறியலாகுமோ என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்; என் அருமையான அக்காளுக்குத் தன் மைத்துனரைப் பற்றி ஏதேனும் அறியமுடியவில்லையே யென்பதை யிட்டுப் பெருங் கவலை; அக்காளிடமிருந்து நேற்றுக் கிடைத்த கடிதத்திலும் அந்த விஷயமாகக் கவலையோடு எழுதியிருப்பதைப் படித்தேன்" என்று சிந்தனையோடு சொன்னுள்; கேட்ட விஜயரத்தினம், "அவருடைய தோற்றம் எப்படிப்பட்டது? வயசு என்ன இருக்கும்? உடையென்ன" என்று வினுவ 'நல்லகிறமுள்ளவர்; எந்நேரமும் நெற்றியிலே திருநீறும் சந்தனப்பொட்டும் தரித்துள்ளவர்; அதிகம் வயசு முதிர்ந்தவராய்த் தோற்றவில்லை; காவிதோய்த்த கதர்த்துணியைச் சந்நியாசிகள் உடுப்பதுபோல் உடுத்திக்கொள்ளுகிறார்; கையிலே ஒரு நுனியில் வளைந்த இந்தச் சிங்கப்பூரப் பிரம்புதான் வைத்துக்கொள்ளுவார் சில சமயம் பிரம்பின்றிக் குடைகொண்டு வருவார்: என்று விபரமாக மனையாள் சொன்னுள்; "ஆம், நீர் சொல்லுகிறபடி அப்படிப்பட்டவர்கள் எங்குஞ் சஞ்சரிப்பதனுல் அறிதலுங் கூடும்; ஆனுற் சில சந்நியாசிகள் உலக விவகாரங்களைப் பற்றி அறிதற்குச் சிறிதும் விரும்புகிறதில்லை இவர் எப்படிப்பட்டவரெனபதும் தெரியவில்லை; அந்தச் சாமியாரை எங்கள் வீட்டிற்கு வரும்படி யழைத்தால் வருவாரோ வாராரோவென்பதையுமறியேன்" என்று கவலையோடு கணவன்சொல்ல பாக்கியலட்சுமி 'நாளைக்கு வெள்ளிக்கிழமை யானபடியாற் சுவாமியார் பள்ளிக்கூடத்திற்கு வருவார்; கேட்டுப் பார்க்கிறேன்; சம்மதித்தால் அழைத்து வருகிறேன்; மறுப்பாரேயானுல் நான் என்ன செய்யலாம்" என்றுள் இருவரும் போசனம் முடித்தனர்;

### "தனியே இருப்பதற் கெண்ணினேன்"

அடுத்த நாட் பாக்கியஇலட்சுமி பள்ளிக்கூடத்திற்குப் போம்போது அதே சிந்தனையாகச் சென்றுள்; குறித்த நேரத்திற் சாமியாரும் பள்ளிக்கூடத்திற்கு வந்து தம் கடமையைச் செய்தார்; பாக்கியலட்சுமியிருந்து படிப்பிக்கும் வகுப்பிற்குச் சாமியார் வருதலும், அவள் அவரை நமஸ்காரஞ்செய்து வகுப்பைவிட்டுப் போகாது ஒதுங்கிநிற்க, சாமியார் அவளைப் பார்த்து "என்ன, அம்மா, வேணும்" என்று ஆதாவுடன்கேட்க, "சுவாமீ, எங்கள் வீடு மிகவுஞ் சமீபத்திலுள்ளது; சுவாமிகளை இன்று பின்னேரம் எங்கள் வீட்டிற்கு ஒருமுறை அழைத்துக்கொண்டு போகலாமென்று எண்ணுகிறேன்" எனப் பணிவுடன்சொல்லி நமஸ்காரம் பண்ணுதலும், "மகளே, நான் எவர் வீட்டிற்கும் போவதில்லை; நான் ஒரு சுவாமியுமல்லேன்,பெரிய துறவியுமல்லேன்; தனியேயிருப்பதற் கெண்ணினேன்; இதுவல்லாமல் என்னிடத்தில் வேறு ஏதும் விசேஷமில்லை, மகளே, நான் வரவேண்டுமென்று நீ அன்புடன் கேட்பதால், நாளை வருவேன்; இன்றைக்கு வெள்ளிக்கிழமையாதலால் அதிகநேரம் கோயிலிலேயே எனக்குக் கழியும்; உங்கள் வீட்டின் குறிப்பை எனக்குச் சொன்னுல், நாளை மத்தியானம் அங்கு வருவேன்" என்று சொல்லிவிட்டுப் பிள்ளைகளுக்குப் படிப்பிக்கத் தொடங்க, பாக்கியலட்சுமியும் அவரை நமஸ்கரித்துக்கொண்டு தன் வகுப்பிற்குப் போனுள்.

(வரும்)

## தேகவியோகம்

### S. M. கந்தையா

மலாய்நாட்டிலே தலைமை ஓவசியராகக் கடமையாற்றி இளைப்பாறியவரும், வேலணையைச் சன்மவூராகக் கொண்டவருமாகிய திரு. S. M. கந்தையா அவர்கள் இந்தச் செப்டெம்பர்மீ 23உ மலாயாவிலுள்ள வோட்சுவத்தன்ஹாம்என்னுமிடத்திலே,தமது வாசஸ்தானத்தில்தேகவியோகமாயினரெனத் திரு. சதாசிவமவர்கள் தந்திமூலமாகத் தெரிவித்துள்ளார்; இவர் பிரிவு அநுதாபப்படத்தக்கது; இவருடைய ஆன்மா சாந்தியடைக.

## உடைத்த கல் தருவதற்கான கேள்விப் பத்திரம்

கீழே குறிக்கப்படும் பிரமாணமுள்ள உடைத்தகல் கிளிநொச்சி புதிய அரசாங்கத் தோட்டத்துக்கு உதவுவதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள்செப்டெம்பர்மீ 30ம் திகதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிவரையிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.8 (எட்டு) ச்யூப் உடைத்தகல் ½ அங்குலம்7 (ஏழு) ச்யூப் ,, ,, 1½ அங்குலம்.

2 கல்பெறும் இடத்தி விருந்து சமீபமாகவுள்ள புகைாத ஸ்தானத்துப் புகைரத வண்டிக்குள் ஏற்றுதற்கான செலவும் உட்படக் கேள்விப்பத்திரத்திற் காட்டப்படவேண்டும்.

3 கேள்விப்பத்திரங்கள் கீழே கையொப்பம் இடுவோர்க்கு மனுச்செய்து பெறற்பாலன. கேள்விப் பத்திரம் பெற விரும்புவோர் யாழ்ப்பாணம் கச்சேரியில் 25 ரூபா கட்டி அதற்கான பற்றுச்சீட்டைக் காட்டினுல்தான் கேள்விப்பத்திரம் அளிக்கப்படும்.

4. ஒப்பந்தத்துக்குக் கையொப்பமிடுமுன், கேள்வியில் தெரிந்தெடுக்கப்பட்டால் 100 ரூபா பிணைப்பணம் கட்ட வேண்டும்.

ம. ஸ்ரீகாந்தா
உதவி மாகாணத் தலைவர். (வ)

கச்சேரி, யாழ்ப்பாணம்,
15—9—47
G. 102 26-9.47

## கடிதர்க்கு விஞ்ஞாபனம்

இப்பத்திரிகைக்குக் கடிதங்களையும் ஏதும் சமாசாரங்களையும் எழுதி யுதவும் அபிமானிகள், சுருங்கச் சோல்லல் விளங்க வைத்தல் என்ற முறையை இயன்றவரையில்அநுசரித்து,தாளின் ஒருபக்கத்தில் மாத்திரம் தெளிவாக எழுதியனுப்புதல் வேண்டும். அபிமானிகள் எழுதியனுப்பும் கடிதங்களைத் தொகுக்கவும் திருத்தவும் மிகையானவற்றைத் தவிர்க்கவும், தகாதனவெனக் கண்டவற்றை ஒதுக்கவும் பத்திரிகாசிரியர்களுக்கு அதிகாரமுண்டென்பதையும், இப்பத்திரிகையை ஆதரியாதவர்கள் வெளியிடும்படி எழுதியனுப்பும் கடிதங்கள் இடம்பெருவென்பதையும் அன்பர்கட்குத் தெரிவிக்கின்றேம்.

—பத்திராசிரியர்.

உங்கள் வியாபாரம்
விருத்தியுற
வேண்டுமா?
*
அப்படியானுல்
இந்துசாதனத்தில்
விளம்பரஞ் செய்யுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
குகமயம்
முல்லைத்தீவு, குமாரபுரம்

## ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகோவில்

# திருப்பணி விஞ்ஞாபனம்

இச் சுப்பிரமணியதலத்தின் தோன்மை, மகிமை என்னும் இவைகளைப் பற்றிச் சைவ மக்கள் பலர் அறிவர், சைவாபிமானிகள் காலந் தோறும் உதவிவரும் தருமப்பொருளைக் கொண்டே இத் திருக் கோவிலின் திருப்பணி நிறைவேறி வருகின்றது.

இப்பொழுதும் இத்திருக்கோவிலிலுள்ள விநாயகர் ஆலயத்தின் எஞ்சிய திருப்பணி திருமஞ்சனக் கிணறு ஸ்தம்பமண்டபம், மகாமண்டபத்தின் கிழக்கு தெற்கு வாசல்களுக்குக் கதவுகள் அமைத்தல், இரண்டுமண்டபங்களுக்கும் நிலத்திற்கு சீமன் கொங்கிறிற் இடுதல், வாகனசாலை களஞ்சியம் சுற்றுமதில் என்னும் இவைகளைச் செய்து நிறைவேற்றவேண்டியிருப்பதால் தங்கள் தங்களாலியன்ற பொருள் உதவி, மேற்படி திருப்பணிகளை நிறைவேற்றிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறேன்.


" போர்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம் "

இங்ஙனம்,

குமாரபுரத் திருப்பணித் தொண்டன்,
கு. பரமசாமிக் குருக்கள்.

Std 26—1.7-47 30-9-47

# உங்கள் சங்கீதக் கருவிகள் பழுதடைந்துவிட்டனவா?



அப்படியானால் உடனே எம்மிடம் கொண்டுவாருங்கள்
3 வருட உத்தரவாதத்துடன் புத்தம்புதிதாய் பழுதுபார்த்துத் தருகிறோம்

[ எவ்வித நிலைமையில் உள்ளதாயினும் சரி கட்டணம் வெகு சகாயம் ]

கல்சற்றுமோகன்புளூட் ஹார்மோனியக் கம்பெனி,
சிவலிங்கப்புளியடி, *484, K. K. S.* றேட், யாழ்ப்பாணம்.

Std 34 12—9—47 To 9—12—47. (F)

## விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை

# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருருத்தல் விலை ரூபா 25
அரைருத்தலுக்கு ரூபா 12-50
கால்ருத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4—48

## தந்தரோக சஞ்சீவி
## கந்தசாமி வைத்தியர்
## சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரு 2

ஒவ்வொருநாளும் ஒரு ஈதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும், முரசுவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் கம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30-6-48 (வெ)

## கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினுங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:

எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரேட் யாழ்ப்பாணம்
[வின்சர்—வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6-6.48

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிலேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

Std.29 1-8—30-7-48;

## விளம்பரம்

இப்பொழுது எங்கள் கைவசமுள்ள பற்கள் பிரபையுடையன; அழகிய இயற்கையானநிறமுடைய முரசு பொன்ற முரசோடு கூடியன; சராசரி ½ அவுன்ஸ் நிறையுள்ள பற்கள் இறகுபோலப் பாரமற்றன; ஆனல் ஒருபோதும் உடையாதன; முரசில் இலகுவாக மாட்டத்தக்கன: எங்களிடத்தில் ஒருமுறை வாங்கி உபயோகித்தாற்றான் இந்த உண்மைகள் உங்ளுக்குப் புலப்படும்.

பத்திரானு மாளிகை
[யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ கம்பனிக்கு எதிரேயுள்ளது]
யாழ்ப்பாணம்

Std 28 11-7—10-10-47.

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Friday, September 26 1947

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org